**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.2** |
| **Name** | **:** | **திரு. சிவானந்தம்** |
| **Father's Name** | **:** | **திரு. நாகலிங்கம்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரிகள் 1 முதல் 10 ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 சுசீலாவை எனக்கு தெரியும். அவருடைய மகன்**

சுரேஷ் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுரேஷ் இறந்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். 20.01.2017 அன்று இரவு 8.30 மணிக்கு மேல் சுசீலா என்பவர் என் மகனை அடித்து போட்டு விட்டார்கள் என்று என்னை அழைத்ததின் பேரில் வயலாத்தூர் புதுப்பாளையத்திற்கு இடையில் சென்று பார்த்த போது சுரேஷ் அடிப்பட்டு கிடந்தார். எங்களுடன் வேறு சிலரும் வந்தார்கள்.

108 ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டு போய்விட்டார்கள். காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். சுரேஷ் என்பவரை ஆஜர் எதிரிகள் அடித்து போட்டதாக தகவல் கிடைத்தது. எதற்காக சுரேஷை அடித்து போட்டார்கள் என்றால் ஏற்கனவே அவர்களுக்குள் முன்விரோதம். எதற்காக அவர்களுக்குள் முன்விரோதம் என்றால் பொது விஷயம், கோவில் விஷயங்களில் சுரேஷ் கலந்துக் கொள்வார். அது சம்மந்தமாக எதிரிகளுக்கும் சுரேஷிற்கும் தகராறு நடக்கும். அதை வைத்து தான் எதிரிகள் பழிவாங்கி விட்டார்கள்.

நான் சம்பவ இடத்தை சென்று சுரேஷை பார்த்தேனா என்றால் பார்த்தேன். எப்படி இருந்தார் என்றால் சுயநினைவில்லாமல் இருந்தார். எதனால் சுயநினைவில்லாமல் இருந்தார் என்றால் வலது பக்க கழுத்தில் ரத்தமும், பின் பக்க தலையின் கீழ் புறமும் ரத்தம் படிந்துக் கொண்டிருந்தது. ரத்தம் எதனால் வந்தது என்றால் நன்றாக அடித்துள்ளார்கள். அதை நான் பார்த்தேன். சிறிது நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்துவிட்டது.

அப்போது யார் யார் அங்கு இருந்தார்கள் என்றால் நான், சுசீலா என்றால் நானும் சுசீலாவும் அடிப்பட்ட இடத்திற்கு இரு சக்கர வாகனத்தில் சென்றோம். வடிவேலு, ஜெயபால், மோகனவேல், விஜயமணி, உமேஷ் ஆகியோர்கள் பின்னால் வந்தார்கள். நானும் சுசீலாவும் வந்தவுடன் 108 ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள். சம்பவ இடம் பொது இடமா என்றால் புதுப்பாளையம் வயலாத்தூர் ஊருக்குச் செல்லும் சாலையாகும். மேற்கண்ட நபர்களை தவிர வேறு யாராவது அங்கு இருந்தார்களா என்றால் வேறு யாரும் அங்கு இல்லை. இது சம்மந்தாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>

வயலாத்தூர் புதுப்பாளையம் சாலையில் சுரேஷ் என்பவர் அடிப்பட்டு கிடப்பதாக ஊரில் வந்து தகவல் சொல்லிய பிறகு நாங்கள் கிளம்பி சென்றோம் என்றால் சரிதான். அவர் விழுந்து கிடந்த இடத்திற்கு அருகிலேயே இரு சக்கர வாகனமும் விழுந்துக் கிடந்தது என்றால் சரிதான். நாங்கள் செல்வதற்கு முன்பே அங்கு 108 ஆம்புலன்ஸ் வந்திருந்தது என்றால் நாங்கள் சென்று இருக்கும் போதே 108ம் வந்துவிட்டது.

சம்பவம் குறித்து யாரோ ஒருவர் ரோட்டில் சென்றவர் வந்து ஊரில் வந்து சொன்னதால் தான் நாங்கள் போய் பார்த்தோம் என்றால் எனக்கு அ.சா.1 சுசீலா சொல்லி தான் நான் சென்றேன், அதற்கு பின்பு தான் சிப்காட்டில் வேலை செய்பவர் சொல்லி சொன்னதாக தெரிந்துக் கொண்டோம். நான் தான் சுசீலாவை இரு சக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றேனா என்றால் நான் தான் ஏற்றிக் கொண்டு சென்றேன்.

எங்களுக்கு பின்னால் தான் ஜெயபால், மோகனவேல் ஆகியோர்கள்

வந்தார்கள் என்றால் 5 நிமிட இடைவெளியில் வந்துவிட்டார்கள். நான் மருத்துவமனைக்குச் சென்றேனா என்றால் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் சென்றேன். எந்த வழியாக காஞ்சிபுரத்திற்குச் சென்றேன் என்றால் புதுப்பாளையம் ஓரிகை வழியாக அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். மருத்துவமனையில் எத்தனை மணிக்கு அவரை அனுமதித்தார்கள் என்றால் இரவு 10.00, 11.00 மணி இருக்கும்.

மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் சிகிச்சைக்கு முன்போ இறந்துவிட்டதாக சொன்னார்கள். இறந்து விட்டதாகச் சொல்லும் போது என்ன நேரம் மற்றும் யார் யார் எல்லாம் மருத்துவமனையில் இருந்தோம் என்றால் இரவு 10.30 மணிக்கு மேல் இறந்துவிட்டார் என்று சொன்னார்கள், அப்போது நான், ஜெயபாலன், மோகனவேல், உமேஷ், சுசீலா ஆகியோர் இருந்தோம். அதற்கு பின்னால் ஊாரார் வந்துவிட்டார்கள்.

அன்றைய இரவு காவல் நிலையத்திற்கு வந்து தகவல் சொன்னோமோ என்றால் சொன்னோம். அப்போது சரவணன், காவல் ஆய்வாளர் அவர்கள் இருந்தார். அவர் அன்றைய இரவே மருத்துவமனைக்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். சுரேஷ் என்பவருக்கு எப்படி காயம்பட்டது என்பது குறித்து சரவணன் என்பவர் விசாரித்த போது சுரேஷ் குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் சொன்னார்கள் என்றால் சரிதான்.

அன்றைய இரவே வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டு அதில் கையொப்பம் பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். யார் யாரிடம் வாக்குமூலம் வாங்கப்பட்டது என்றால் என்னிடமும், சுசீலா, ஜெயபால், மோகனவேல் மற்றும் விஜயமணி ஆகியோரிடம் வாக்குமூலம் வாங்கப்பட்டது.

வாக்குமூலங்களில் மேற்கண்ட நபர்கள் கையொப்பம் போட்டுக் கொடுத்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எவ்வளவு நேரம் நான் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் மருத்துவமனையில் சேர்த்திலிருந்து பிரேதம் கொடுக்கும் வரை இருந்தோம். சுரேஷின் உறவினர்கள் இருந்தார்கள். சுசீலா மருத்துவமனையிலிருந்து வெளியே எங்கும் செல்லவில்லை என்றால் சரிதான்.

எங்கள் ஊரிலிருந்து சுரேஷ் அடிப்பட்டிருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும். அந்த இடம் ஒரு ஏரிக்கரை வளைவு என்றால் ஆற்றங்கரை கால்வாய். சுரேஷ் விழுந்துக் கிடந்த இடத்திற்கு அருகில் தான் செய்யாறு ஓடுகிறது என்றால் சரிதான். சம்பவ இட சாலை இரவு 7.00 மணிக்கு மேல் ஒரு பெரிய அளவில் போக்குவரத்து நிறைந்த சாலை இல்லை என்றால் சரியல்ல, சிப்காட் செல்லும் போக்குவரத்து இருக்கும்.

சிப்காட்டிலிருந்து வெளியில் செல்லும் அனைத்து வாகனங்களும் அந்த சாலையை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். சுரேஷ் அடிப்பட்டு கிடந்த இடத்திலிருந்து 1 கி.மீ. தாண்டி தான் ஊரே உள்ளது என்றால் இடைப்பட்ட தூரத்தில் வயல்வெளியுடன் 2 வீடுகள் உள்ளது. அந்த 2 வீட்டில் உள்ளவர்களுக்கு ரோட்டில் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். மறுநாள் காலை நானும் சுசீலாவும் காவல் நிலையத்திற்குச் சென்றோமா என்றால் காலை 8.00 மணிக்குச் சென்றோம்.

நாங்கள் காலை காவல் நிலையத்திற்குச் செல்வதற்கு முன்பே காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டார் என்றால் சரிதான்.

அன்று காலையே சந்தேகத்தின் அடிப்படையில் நாகப்பன், தீபா மற்றும் நீலா ஆகியோரை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டார்கள் என்றால் விசாரணை மட்டும் செய்து விட்டு சென்றுவிட்டார்கள். எவ்வளவு நேரம் நான் காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால் 1 மணி நேரத்திற்கு இருந்தேன்.

ஒரு மணி நேரம் காவல் நிலையத்தில் நான் இருந்த போது எதிரிகள் நாகப்பன், தீபா மற்றும் நீலா ஆகியோர் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சில சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.